# ஈழத்துச் சிவ வழிபாட்டு மரபில் திருமங்கலாய் சிவன் கோயில் - ஓர் ஆய்வு

சோமசுந்தரம் இந்துஜானி

EU/IS/2013/AC/199

CS- 5349

LIBRARY
0 9 OCT 2020
EUSL SRI LANKA

இவ்வாய்வானது இந்துநாகரிகத்துறை சிறப்புக் கலைமாணி பட்டத்திற்கான ஒரு பகுதி தேவையினை நிறைவு செய்யும் பொருட்டு கிழக்குப் பல்கலைக்கழக கலைகலாசாரபீடத்திற்கு சமர்பிக்கப்படுகிறது.

FAC 790
Project Report
Library - EUSL

இந்துநாகரிகத்துறை,

கலைகலாசார பீடம்,

கிழக்குப் பல்கலைக்கழகம்,

இலங்கை

2019

PROCESSED
MAIN LIBRARY, EUSL

## ஆய்வுச்சுருக்கம்

இலங்கையின் கிழக்குப் பிராந்தியத்தில் அமைந்துள்ள தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலை மாவட்டத்தின் தென்பகுதியில் அமைந்துள்ள திருமங்கலாய் சிவன் கோயிலை மையப்படுத்தியதான **"ஈழத்துச் சிவ வழிபாட்டு மரபில் திருமங்கலாய் சிவன் கோயில் - ஓர் ஆய்வு"** எனும் தலைப்பில் அமைந்த இவ்வாய்வானது அவ்வாலய வரலாற்றுப் பெருமையை சான்றுகளினூடாக மீட்டெடுப்பதை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாய்வு கள ஆய்வு, வரலாற்றியல் ஆய்வு, பகுப்பாய்வு, ஒப்பியல் ஆய்வு ஆகிய முறையியல்களினூடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாய்வுக்கு பல மூலாதாரங்கள் முன்னோடியாக அமைந்து காணப்பட்டன. அந்தவகையில் இப்பிரதேச மக்களது வாழ்விடப் பகுதிகளிலிருந்து கிடைத்த பலதரப்பட்ட சான்றாதாரங்கள் மற்றும் இக்கோயிலில் தொல்லியல் ஆய்வுகளை மேற்கொண்ட தொல்லியல் ஆய்வாளர்களது ஆய்வு முயற்சிகள், ஆவணக்குறிப்புக்கள் போன்றவற்றின் மூலம் வெளிக்கொண்டுவரப்பட்ட, குறிப்பிட்ட பிரதேசத்திற்குட்பட்ட மக்களது வாழ்க்கை முறை, பழக்கவழக்கங்கள், திருமங்கலாய் சிவன் கோயிலோடு தொடர்புடைய வரலாற்று மூலாதாரங்களான கல்வெட்டுக்கள், கோயில் மணி, சிவலிங்கம், விநாயகர், வைரவர் சிற்பம், திருக்கரைசைப்புராணம், தீர்த்தக்கிணறு போன்றவை இவ்வாய்வுக்கு உறுதுணையாக அமைந்திருந்தன.

இக்கோயிலினை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்தி இதுவரை இலக்கிய ஆவணங்கள் அதிகம் வெளிவராத நிலையில் இக்கோயிலின் வரலாறு, சிறப்பு, தொன்மை, என்பன மறைக்கப்பட்ட ஒன்றாகவே காணப்படுகின்றது. இந்நிலையில் இவ்வாய்வின் போது இக்கோயிலினை சுற்றி பரவலாக அடையாளம் காணப்பட்ட தொல்பொருட் சின்னங்களான தமிழ்ச் சாசனங்கள், நாணயங்கள், கட்டட இடிபாடுகள், பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்கள், சுடுமண் உருவங்கள், என்பன இக்கோயிலினது தொன்மையான வரலாற்றையும், சிறப்பினையும் வெளிப்படுத்தி நிற்கின்றமை, இவ்வாய்வின் மூலம் வெளிக்கொண்டுவரப்பட்டுள்ளது.

திருக்கரைசையம்பதியில் உள்ள திருமங்கலாய் சிவன் கோயில் இந்துசமய மன்னர்களால் கட்டப்பட்டு, இலங்கை முழுவதையும் தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்த சோழமன்னர்களால் புனர்நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இச்சோழமன்னர்களின் ஆட்சியில் செல்வாக்கு பெற்ற இக்கோயில் காலத்தாலும், மதப்புறக்கணிப்பாலும், இயற்கையின் சீற்றத்தாலும், மக்கட்குடியிருப்புக்களின் நடவடிக்கையாலும் சிதைவடைந்து அடையாளம் இழந்துள்ளமை இவ்வாய்வில் நன்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் கிடைக்கப்பெற்றுள்ள தொல்பொருட்சின்னங்கள், இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாலயத்தின் வரலாறு, தொன்மை, கட்டுமானம்,

வழிபாடுகள், மூர்த்தி, தலம், தீர்த்தம், சமுதாய அமைப்பு, அரசர்களின் ஆட்சி சிறப்பு முதலியவற்றையும் இவ்வாய்வு வெளிக்கொணர்கின்றது.

திருகோணமலையில் அழிவடைந்து செல்லும் திருமங்கலாய் சிவன் கோயிலை மீழவும் புனர்நிர்மாணித்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும் என்ற அடிப்படையில் இவ்வாலயத்தோடு தொடர்பான விடயங்களை ஆவணப்படுத்தும் ஒரு முயற்சியாகவே இவ்வாய்வு அமைந்துள்ளது. எதிர்காலத்தில் இவ்வாலயம் தொடர்பான மேலதிக ஆய்வுகளை மேற்கொள்பவர்களுக்கு இவ்வாய்வு ஒரு முன்னோடியாக அமையும் எனலாம்.

**திறவுச் சொற்கள்** :- திருமங்கலாய், கோயில், சிவவழிபாடு, திருக்கரைசைப்புராணம், அகஸ்த்தியர், சிங்கபூதரன்

## பொருளடக்கம்


**விடயம்** **பக்கம்**

Declaration.......................................................................................I

உறுதியுரை.......................................................................................II

நன்றியுரை.......................................................................................III

ஆய்வுச் சுருக்கம்.......................................................................................IV-V

ஆய்வுப் பிரதேசம்.......................................................................................VI

சுருக்கக் குறியீட்டு விளக்கம்.......................................................................................VII

பொருளடக்கம்.......................................................................................VIII-XI


## இயல் : ஒன்று


**1.0 ஆய்வு அறிமுகம்.......................................................................................1-12**

1.1 ஆய்வுத் தலைப்பு.......................................................................................1

1.2 அறிமுகம்.......................................................................................1-4

1.3 ஆய்வு முக்கியத்துவம்.......................................................................................4-5

1.4 ஆய்வுக் கருதுகோள்.......................................................................................5

1.5 ஆய்வு வரையறை.......................................................................................6

1.6 ஆய்வு இடைவெளி.......................................................................................6

1.7 ஆய்வு நோக்கங்கள்.......................................................................................6-7

1.7.1 பிரதான நோக்கங்கள்.......................................................................................6

1.7.2 துணை நோக்கங்கள்.......................................................................................7

1.8 ஆய்வுப் பிரச்சினை.......................................................................................7

1.9 ஆய்வு முறையியல்.......................................................................................7

1.10 ஆய்வு மூலங்கள்.......................................................................................8

1.10.1 முதலாம் நிலைத்தரவுகள்(primary data)........................................8

1.10.2 இரண்டாம் நிலைத்தரவுகள்(secondry data)........................................8

1.11 இலக்கிய மீளாய்வு.................................................................8-11

1.12 ஆய்வுப் பகுப்பு ...................................................................11-12

## இயல்: இரண்டு

**2.0 ஈழத்தில் சிவ வழிபாடு......................................................13-42**

2.1 வரலாற்றுக்கு முற்பட்ட காலம் ..............................................................13

2.1.1 பெருங்கற்காலம்....................................................................13-14

2.1.2 பெருங்கற்கால நாணயக்குறிப்பு ...............................................15

2.2 அநுராதபுரக் காலம்.......................................................................16

2.2.1 சாசன, இலக்கியச்சான்றுகள் ................................................16-21

2.2.2 அநுராதபுரக் கால நாணயக்குறிப்பு.........................................21-24

2.2.3 மகாவம்சக் குறிப்பு.........................................................................24

2.2.4 வாயுபுராணக் குறிப்பு....................................................................25

2.2.5 யாழ்ப்பாண வைபவமாலைக் குறிப்பு..........................................25

2.2.6 கல்வெட்டுக்களில் சிவன் பற்றிய செய்திகள் ..................................25-26

2.2.7 பாடல் பெற்ற தலங்கள் .....................................................................26

2.3 சோழராட்சிக் காலம்..................................................................27-28

2.3.1 சோழர்கால நாணயக்குறிப்பு..........................................................29

2.3.2 இந்திய இலங்கைத் தொடர்புகள்.................................................30-31

2.3.3 கோயில் வழிபாடு ................................................................................32

2.3.4 சிவ வடிவங்கள்........................................................................33-37

2.4 19ஆம் நூற்றாண்டுக்கு பின்னர் ஈழத்தில் சிவவழிபாடு..............................38-42

2.5 தொகுப்புரை..........................................................................................42

## இயல் : மூன்று


**3.0 திருமங்கலாய் பிரதேச அறிமுகமும் சிவன் கோயிலும்............43-65**

3.1 திருமங்கலாய் பிரதேச அறிமுகம்........................................................43-46

3.2 திருமங்கலாய் சிவன் கோயிலின் வரலாற்று தொன்மை.................................47

3.2.1 நாட்டார் வழக்காற்றியல் மூலங்கள் (ஐதீகங்கள்)..............................47

3.2.1.1 கதைகள் (Tales)...........................................................................48-51

3.2.1.2 செய்யுட்கள் (Poetry)........................................................................51

3.2.2 பெருங்கற்கால பண்பாட்டு சின்னங்களும், பிராமிக்கல்வெட்டுக்களும்......51-53

3.3 திருமங்கலாய் சிவன் கோயிலின் மூர்த்தி, தீர்த்தம்......................................54

3.3.1 மூர்த்தி...........................................................................................54

3.3.2 தீர்த்தம்......................................................................................55-58

3.4 வழிபாடுகள் மற்றும் பூஜைமுறைகள்..............................................59-62

3.5 திருமங்கலாய் சிவன் கோயிலுக்கும் ஏனைய கோயிலுக்கும் இடையிலான தொடர்பு..........................................................................................................63

3.6 திருமங்கலாய் சிவன் கோயிலின் சிறப்புக்கள்...........................................64

3.7 தொகுப்புரை.........................................................................................65


## இயல் : நான்கு


**4.0 திருமங்கலாய் சிவன் கோயிலுடன் தொடர்புடைய வரலாற்று....66-89 ஆவணங்கள்**

4.1 வரலாற்று ஆவணங்கள்........................................................................66-68

4.2 கல்வெட்டுக்கள்...............................................................................68-69

4.3 கோயில் மணி......................................................................................70-72

4.4 சிவலிங்கம்..............................................................................................73

4.5 பிள்ளையார் சிற்பம்...................................................................................73

4.6 வைரவர் சிற்பம்........74

4.7 திருக்கரைசைப்புராணம்........75-83

4.7.1 ஈழ நாட்டின் சிறப்பு........77-79

4.7.2 சிவனின் சிறப்பு........79-81

4.7.3 மகாவலி கங்கையின் மகிமை........82

4.7.4 அகஸ்த்தியரின் சிறப்பு........82

4.7.5 எழில் வேந்தன் சிறப்பு........82

4.7.6 சிங்கபூதரன் சிறப்பு........83

4.8 தூண்கள்........84

4.9 ஆலய தீர்த்தக்கிணறு........84

4.10 கோயில் கட்டட அமைப்பு........84-85

4.11 ஏனைய தொல்பொருட் சின்னங்கள்........86

4.12 திருமங்கலாய் கோயிலின் இன்றைய நிலை........87-89

4.13 தொகுப்புரை........89

## இயல் : ஐந்து

5.0
நிறைவுரை........90-95

உசாத்துணை பட்டியல்கள்........96-98

நேர்காணல்........98

பின்னிணைப்புக்கள்........I-VIII